வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 2420 /அ4/2023 நாள் 14.06.2023

| | |
|---|---|
| பொருள் | மேல்நிலைக் கல்விப் பணி – 2023-2024 ஆம் கல்வியாண்டில் அரசு / நகரவை உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள முதுகலை ஆசிரியர்கள் / பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்கள் தற்காலிகமாக தொகுப்பூதிய அடிப்படையில் பள்ளி மேலாண்மை குழு மூலம் தகுதியுள்ள ஆசிரியர்களை கொண்டு நியமனம் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ள தலைமை ஆசிரியர்கள் அறிவுறுத்துதல் – சார்பு |
| பார்வை | 1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண் 34087/சி2/இ2/2022 நாள் 01.07.2022 மற்றும் 11.07.2022<br>2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண் 26677/சி2/இ2/2023 நாள் 09.06.2023<br>3. அரசாணை நிலை எண் 07 பள்ளிக் கல்வி ( ப.க.5 (1) துறை நாள் 07.01.2023 |

பார்வை 2ல் காணும் செயல்முறைகளின் படி, வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு / நகரவை உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 2023 -2024 ஆம் கல்வியாணடில் பட்டதாரி / முதுகலை ஆசிரியர்களில் காலிப் பணியிடமாக உள்ள பள்ளிகளில் தகுதிவாய்ந்த ஆசிரியர்களை தற்காலிகமாக பள்ளி மேலாண்மை குழு மூலம் நிரப்பி கொள்ள பள்ளி தலைமைஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மேற்காண் ஆசிரியர் நியமனங்களில் உயர்நிலை / மேல்நிலை பள்ளி தலைமைஆசிரியர்கள் பணியிடம் காலியாக இருந்து அவற்றுள் முத்த பட்டதாரி / முதுகலை பட்டதாரி ஆசிரியர் பொறுப்பு தலைமைஆசிரியராக பணிபுரிவதால் பதிலியாக பள்ளி மேலாண்மை குழு மூலம் நியமனம் செய்து கொள்ளவும், 2023 -2024 ஆம் கல்வியாண்டிற்கு பொது மாறுதல் கலந்தாய்விற்கு பின்னர் காலியாக உள்ள முதுகலை / பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்களிலும் , மகப்பேறு விடுப்பில் உள்ள ஆசிரியர்களுக்கு பதிலியாக தற்காலிகமாக நியமனம் செய்து கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தங்கள் பள்ளியில் காலிப் பணியிடங்கள் சார்பான படிவம் 3 மற்றும் 4 ல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 19.06.2023 மாலை 5.00 மணிக்குள்

அ3 / அ4 பிரிவிலும் சமர்பிக்கவும் தங்கள் பள்ளியில் காலிப்பணியிடம் இல்லை எனில் இன்மை அறிக்கை தவறாமல் சமர்பிக்குமாறும் தெரிவிக்கப்படுகிறது.

12.06.2023 நிலவரப்படி 2023-2024 ஆம் கல்வியாண்டில் நியமனம் செய்யப்பட்ட தற்காலிக ஆசிரியர்களின் விவரங்களை படிவம் 1 மற்றும் 2 ல் பட்டதாரி ஆசிரியர் தனியாகவும் முதுகலை ஆசிரியர் சார்பாக தனியாகவும் பூர்த்தி செய்து அனுப்புமாறு சார்ந்த பள்ளி தலைமைஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காண் தற்காலிக அடிப்படையில் **2023 மார்ச் / ஏப்ரல்** மாதங்களில் பணிப்புரிந்த ஆசிரியர்களின் விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பற்றுச் சீட்டுடன் படிவம் மற்றும் வருகைப்திவேடு நகலுடன் பூர்த்தி செய்து 3 நகல்கள் ஒப்படைக்குமாறு சார்ந்த பள்ளி தலைமைஆசிரியர்கள் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1. படிவம் – 1 முதல் 4 வரை
2. பற்றுச் சீட்டு நகல்

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

**பெறுநர்**

தலைமைஆசிரியர்கள்

அனைத்து அரசு / நகரவை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்

வேலூர் மாவட்டம்

**நகல்**

சென்னை-6 பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.

# பற்றுச்சீட்டு

2022 -2023 ஆம் கல்வியாண்டில் பள்ளி மேலாண்மைக் குழு மூலம் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி / முதுகலை ஆசிரியர்களுக்கு (**தனித்தனியாக** ) 01.03.2023 முதல் 28.04.2023 வரை ஊதியம் பெற்று வழங்கப்பட்டவுள்ள விவரம் பணிந்தனுப்பலாகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | பாடம் | பணிப்புரிந்த நாட்கள் | பணிப்புரிந்த மாதங்கள் | தொகை | கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

தலைமைஆசிரியர் கையொப்பம்